**திரு. கரு. ராம. கரியமாணிக்க அம்பலம் :** பிற்பட்ட மாணவர் களுக்குக் கொடுக்கப்படுகிற உதவித் தொகை மிகவும் ஏழையாக இருந்தும் கூட,குறைவான மார்க்குகள் வாங்கிய சில பேர்களுக்குக் கிடைக்கிறது. கூடுதல் மார்க்குகள் வாங்கியவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. அந்த மாதிரி நிலை இருப் தால் எங்களைப் போன்ற பிரதிநிதிகளுக்குக்கூட அது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அதை ஒரு அடிப்படையில், மார்க் அடிப்படையில், ஏழைகள் என்ற அடிப்படையில் கொடுக்க திட்டவட்டமாக அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து :** ஏழைகள் மிகக் குறைந்த மார்க்குகள் வாங்குகிறவர்கள் என்ற அடிப்படையில் தான் கொடுக்கப்பட்டு வருகிறது. சிலருக்குக் கொடுக்கப்படவில்லை என்ற குறை இருந்தால் அதைப் பற்றி தனியான முறையில் நேரில் தெரிவித்தால் அது குறித்து நடவடிக்கைகள் எடுக்கலாம்.

**திரு. இல. பலராமன் :** மாநிலத்தில் முதல் தரமாக தேறிய ஏழை ஹரிஜன பிள்ளைகளுக்கும், பின்தங்கிய வகுப்பினரின் பிள்ளைகளுக்கும் இதுவரை சலுகைப் பணம் வராத நிலை பரவலாக இருந்து வருகிறது என்ற நிலையில் எல்லா மனுக்களும் அரசாங்கத்திற்கு வரவேண்டுமென்ற நோக்கம் எதற்காக என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து :** ஏறத்தாழ எல்லா மாணவர்களுக்கும் தரப்பட்டு வருகிறது. ஒரு சில மாணவர் களுக்குத் தரப்படவில்லை என்றிருப்பதுகூட இன்னும் இரண்டு மூன்றுக் தினங்களில் தரப்பட முடியும். ஆனால் விண்ணப்பங்கள் செய்துள்ள எல்லா மாணவர்களுக்கும் தரப்படும் என்ற உறுதியை தருவதற்கில்லை.

**திரு. எஸ். முருகையன் :** ரூ. 300-க்குக் குறைவாக வருமானம் உள்ள எல்லா ஏழை மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் வழங்குவதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. இந்த ஸ்காலர்ஷிப் பாரங்கள் கல்லூரிகளிலிருந்து அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுவதால் பல மாணவர்களுக்கு இந்த ஆண்டு மறுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலதாமதத்தை ஏற்று கொண்டு அந்த மாணவர்களுக்கு மீண்டும் ஸ்காலர்ஷிப் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து :** கல்லூரிகளி லிருந்து அனுப்பப்படுவதில் காலதாமதம் அதிகம் ஏற்படுவதாக நான் கருதவில்லை. ஆனால் அந்த ஃபாரங்களை பூர்த்தி செய்வதில் மாணவர்கள் செய்கிற தவறுகள், அந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்காக ஒதுக்கப்படுகிற நேரம் இவைகளால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே காலதாமதம் ஆகாத அளவிற்கு விரைவில் தருவதற்கான முயற்சிகள் எப்போதும் எடுத்துக்கொள்ளப்பட்டுத்தான் வருகிறது.

## திருப்பூர் நகர அமைப்பு

* 98 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ராமநகர் 1, 2, 3-வது வீதியில் வசிக்கும் பொது மக்கள் 23–6–1967 அன்று நகர அமைப்பு, சாலை அமைப்பது பற்றி அமைச்சருக்கு அனுப்பிய மனு வந்து சேர்ந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** (அ) சேர்ந்தது.

(இ) மனுவின் பேரில் திருப்பூர் நகராட்சி ஆணையாளரின் குறிப்புரை கேட்கப்பட்டுள்ளது. ஆணையாளரின் முடிவான பதில் எதிர்பார்க்கப்படு கிறது.

1968 பிப்ரவரி 28]

திரு. சு. துரைசாமி : நகரமைப்பு இயக்குநர் அங்கீகாரம் பெறுமலே செல்வாக்குள்ளவர்கள் நிலங்களை தங்கள் சொந்த விருப்பப்படி விற்பதால் தான் பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய சாலைகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சாலைகளை மக்கள் வரிப் பணத்திலிருந்து வாங்காமல் நகரமைப்பு விதிமுறைப்படி விரைவில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நகரமைப்புத் திட்டத்தை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் சொல்கிற குறைகள் கவனிக்கப்படும்.

**Dr. H. V. HANDE** : What are the exact details of the representation that has been made ?

**The Hon. Thiru S. J. SADIQ PASHA** : The residents of Ramnagar have represented that the four roads in Ramnagar have been planned to connect the Perumanallur Road and Avanashi Road that the first three streets have been blocked by 'thatties' resulting in stagnation of drain water which will cause spreading of several diseases. They have stated that they have to go to Avanashi Road and Railway station to reach Perumanallur Road and that the Commissioner hesitates to take action against the person concerned as he is related to the Chairman of the Municipal Council.

திரு. சு. துரைசாமி : அந்த இடத்துச் சொந்தக்காரர் நகர மன்ற அங்கத்தினராகவும், நகரத்தில் செல்வாக்குள்ளவராகவும், முன்னால், இங்கிருந்த அரசாங்கத்தில் இருந்த ஒரு அமைச்சரின் உறவினராகவும் இருந்த காரணத்தினால்தான் இந்த நடைமுறைகள் எல்லாம் மீறப்பட்டு அவர்கள் தங்கள் சொந்த விருப்பப்படி சாலைகளை அடைத்து வைத்திருக்கிறார்கள். இது நீண்ட காலமாக இருக்கிறது. ஆகவே அந்தச் சாலைகளை, அடைக்கப்பட்ட இடங்களை விரைவில் அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : அங்கத்தினர் அவர்கள் சொல்வது போன்று ஒரு புகார் இருந்து வருகிறது. அதுபற்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பஞ்சாயத்துச் சீரமைப்பு

* 99 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து சீரமைப்புச் சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(இ) திரு. முருகேச முதலியார் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளில் எவைகளை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) and (இ) திரு. முருகேச முதலியார் தமது அறிக்கையில் செய்துள்ள பல பரிவுரைகளையும் அரசு ஆராய்ந்து வருகிறது. இவை குறித்து முடிவு எடுக்கப்படும். இதுவரை எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பலருக்கு வேலையிழப்பு ஏற்படலாம் என்ற எண்ணம் இருக்கிறது. குறிப்பாக சமூகப் பணியாளர்களாக வேலை செய்யும் மு.ப. 11-30 அரசியல் தியாகிகளுக்கு வேலையிழப்பு ஏற்படலாம் என்ற எண்ணம் இருக்கிறது. இதனைப் போக்க ஊராட்சி ஒன்றியங்களில் வேலை பார்ப்பவர்கள்